அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 27/2019

எனது இலக்கம்: EST-3/DICIP/06/0245
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2019.09.09

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>தாபன விதிக்கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 27:10 ஆம் உப பிரிவினை திருத்தியமைத்தல்</u>**

2004.12.15 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2004 இனால் திருத்தியமைக்கப்பட்ட தாபன விதிக்கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 27:10 ஆம் உப பிரிவின் மீது உமது கவனத்தின் பால் தயவுடன் கொண்டு வருகின்றேன்.

02. அப் பிரிவின் 27:10:1 மற்றும் 27:10:2 உப பிரிவில் கீழ்வரும் வகையில் திருத்தியமைப்பதற்கு 2019.08.27 ஆந் திகதியன்று அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.

27:10:1 ஆயினும், இலஞ்சம் எடுத்தல் அல்லது அரச விரோதச் செயற்பாடுகள் அல்லது பயங்கரவாத செயற்பாடுகள் அல்லாத ஊழல் மற்றும் குற்றவியல் தவறொன்று தொடர்பாக அரச அலுவலர் ஒருவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளள சந்தர்ப்பத்தில் அவ் அலுவலர் சம்பந்தமாக 02 மாதங்களுக்கு அதிகரிக்காத காலப்பகுதியினுள் ஒழுக்காற்று அதிகாரி/ நிர்வாக அதிகாரியினால் ஆரம்ப கட்ட விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும். குறித்த ஆரம்பகட்ட விசாரணை அறிக்கை ஒழுக்காற்று அதிகாரி/ நிர்வாக அலுவலரினால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதுடன், அவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைய அலுவலரை மீள சேவையில் அமர்த்துவதனால் அரசாங்க சேவைக்கு எவ்வித அபகீர்த்தியும் ஏற்படுவதில்லை என அரசாங்க சேவைகள் ஆணைக்குழு தீர்மானிக்கப்படும் பட்சத்தில் அவ்வாறான அலுவலர் ஒருவரை மீளச் சேவையில் அமர்த்த முடியும்.

27:10:2 27:10:1 ஆம் உப பிரிவின் கீழ் மீண்டும் சேவையில் அமர்த்துவதனால் அரசாங்க சேவைக்கு அபகீர்த்தி ஏற்படுவதாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் பட்சத்தில், நீதிமன்ற தீர்ப்பு கிடைக்கும் வரை தொடர்ந்தும் அவ் அலுவலரது பணி இடைநீக்கம் செய்யப்படல் வேண்டும். அவ்வாறான அலுவலர் ஒருவர் சம்பந்தமாக நிதிமன்ற தீர்ப்பு கிடைப்பதற்கு ஓராண்டுக்கு அதிக காலம் செல்லுமாயின், அலுவலருக்கு சம்பளத்தில் இருந்து அரைவாசிக்கு மேற்படாத தொகையை செலுத்துவதற்கான அதிகாரத்தை வழங்குவதற்கு ஒழுக்காற்று அதிகாரியினால் முடியும்.

03. அவ்வாறே தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 27:10 உப பிரிவு ஏற்பாடுளுக்கு ஏற்றவாறு இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் சம்பந்தமாகவும் திருத்தப்பட்ட 27:10:1 மற்றும் 27:10:2 உப பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்கு அதிகாரிகளுக்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு